**அதிகாரத்திற்கு கீழ்படிதல்**

**வாசிக்க**: **ரோமர்** 13:1-7

நாம் அதிகாரியாயிருக்க விரும்புகிறோம். ஆனால் நம்மை பிறர் அதிகாரம் செய்வதை நாம் விரும்புவதில்லை. பிள்ளைகள் பெற்றோரின் அதிகாரத்தை விரும்புவதில்லை. மாணவன் ஆசிரியரின் அதிகாரத்தை விரும்புவதில்லை. வேலைக்காறன் எஜமானின் அதிகாரத்தை விரும்புவதில்லை. ஊழியன் எஜமானின் அதிகாரத்தை விரும்புவதில்லை. இவ்வற்றை தான் தற்கால உலகில் நாம் அன்றாடம் காட்சியாக காணுகின்றோம்.

சமீபத்தில் தமிழ்நாட்டில் நடந்த இரு கொலைகள் இதை நமக்குக் கூறுகிறது. 2012-ம் ஆண்டு பள்ளி மாணவன் ஒருவன் தன் தகப்பனாரை அழைத்து வரச் சொன்னதால், பல வேளைகளில் படிக்காததால், வீட்டு வேலையைச் செய்யாததால், அவனை கடிந்து கொண்டதால் அந்த ஆசிரியையை திட்டம் தீட்டி கத்தியால் கொடூர முறையில் குத்திக் கொன்றான். 2013 அக்டோபர் மாதத்தில் மூன்று கல்லூரி மாணவர்கள் தங்கள் கல்லூரி முதல்வரைக் கொன்றனர். அதிகாரத்துக்கு கீழ்படிய விருப்பம் இல்லை. சிறுவயதிலிருந்தே அதிகாரங்களை எதிர்க்கிறவர்களாக நம் சமுதாயம் மாறிவருகிறது.

சில பிள்ளைகள் தாங்கள் விரும்பியதை பெற்றுக்கொள்ள, பெற்றோரை பயமுறுத்துவதை நாம் காண்கிறோம். ஆனால் வேதம் நாம் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்படிய வேண்டும் என்று கூறுகிறது. ஏனெனில் அதிகாரத்தை அளிக்கிறவர் கடவுள். நீ அதிகாரத்திற்கு எதிர்த்து நின்றால் தேவனுடைய கட்டளைக்கு எதிர்த்து நிற்கிறாய் என்று அர்த்தம். அதிகாரி தீயவனாய் இருந்தாலும் அவனுக்குக் கீழ்படிய வேண்டும். “நீங்கள் மனுஷனுடைய கட்டளைகள்

யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்படியுங்கள்” 1பேதுரு 2:13 என பேதுருவும் கூறுகிறார்.

நாம் ஏன் அதிகாரங்களுக்கு கீழ்படிய மறுக்கிறோம்? தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பதால். பிறரோடு உங்களை ஒப்பிடுவதாலுமாகும். உங்களை தனித்தன்மையாய்தான் தேவன் படைத்திருக்கிறார். நம் நண்பர்கள் பல வேளைகளில் காரணமாயிருக்கின்றனர். நாம் நம் நண்பர்களை, அல்லது பிற காரியங்களை கடவுளுக்கும் அதிகமாக நேசிக்கும்போது அதிகாரங்களை வெறுக்கிறோம். எதையும் பொழுதுபோக்கிற்காகவே செய்தல். பணத்தின், நேரத்தின் முக்கியத்தை புரிந்து கொள்ளாமை, எதையும் எளிதில் பெற்றுக்கொண்டு விடவேண்டும் என்ற எண்ணம், கடின உழைப்புக்கு விருப்பம் இல்லாமை, செய்யும் செயலில் ஈடுபாடு இல்லாமல் செய்தால். புரிந்துக்கொள்ளும் உணர்வு இல்லாதிருக்கும்.

நாம் எதைச் செய்தாலும் தேவன் பார்க்கிறார் என்ற எண்ணத்தோடு தேவனுக்கு பயப்படும் பயத்தோடும், தேவனை பிரியப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடும் செய்வோமேயானால் அதிகாரத்தை நாம் மதித்து கீழ்படிவோம். உன் ஆசிரியர், பெரியவர்கள் இவர்கள் தேவனால் உனக்கு கொடுக்கப்பட்டவர்கள் என்று உணர வேண்டும்.

**கேள்விகள்**:

1. அதிகாரத்தை அளித்தவர் யார்?

2. அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்பது என்ன அர்த்தம்?

3. உன் ஆசிரியர், பெரியவர்கள் யாரால் கொடுக்கப்பட்டவர்கள்.